# இலண்டன் தமிழ் நிலையம்

நடாத்தும்

## நாவன்மைப் போட்டி 2019

இடம்: Wembley High School, East Lane, Wembley HA0 3NT

காலம்: 24.02.2019 நேரம்: காலை 09.00 மணி

**விண்ணப்பதாரர் முறையே பிரிவு, வகுப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளவும். ஆங்கிலப் பாடசாலையில் கற்கும் வகுப்பே இங்கு கவனத்தில் எடுக்கப்படுகின்றது.**

| | **English school** |
|---|---|
| அ பிரிவு | Nursery and below |
| ஆ பிரிவு | Reception & Year 1 |
| இ பிரிவு | Year 2 & Year 3 |
| ஈ பிரிவு | Year 4 & Year 5 |
| உ பிரிவு | Year 6 & Year 7 |
| ஊ பிரிவு | Year 8 & Year 9 |
| எ பிரிவு | Year 10 & Year 11 |

குறித்த வயதிற்கான பேச்சுக்களையும் விண்ணப்பப் படிவங்களையும் £1.00 செலுத்திக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 10.02.2019

---

விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்: (English) ................................................................................................................

(Tamil) ...............................................................................................................

ஆங்கிலப் பாடசாலையில் படிக்கும் வகுப்பு ............................

பிறந்த திகதி ....................................................................................................

தொலைபேசி இலக்கம் ......................................................................................

பிரிவு ....................................................................................... (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ)

Group அ Nursery & Below (English school)

## *சின்னப் பாடல்*

அனைவருக்கும் வணக்கம்.

காக்கா காக்கா பறந்து வா
காலயில் எழுந்து பறந்து வா

கோழி கோழி ஓடி வா
குஞ்சைக் கூட்டி ஓடி வா

வெள்ளைப் பசுவே விரைந்து வா
பிள்ளைக்குப் பால் கொண்டு வா

பப்பி பப்பி பாய்ந்து வா
பந்தை வாயில் கவ்வி வா

நன்றி; வணக்கம்

Group ஆ Recepition & Year1 (English school)

சின்னப்பூனை

அனைவருக்கும் வணக்கம்.

சின்னச் சின்னப் பூனை

சிறந்த நல்ல பூனை

என்னைப் பார்த்துத் துள்ளும்

எங்கள் வீட்டுப் பூனை

வட்டமான கண்கள்

வண்ணமான செவிகள்

கட்டையான கால்கள்

காட்டும் நல்ல பூனை

நாயைப் பார்த்துச் சீறும்

நகத்தால் மரத்தைக் கீறும்

பாயப் பதுங்கி ஓடும்

பந்தை உருட்டி ஆடும்

நன்றி; வணக்கம்.

Group இ Year2 & Year3 (English school)

# சிங்கமும் சுண்டெலியும்

அனைவருக்கும் வணக்கம்.

ஒரு காட்டில் ஒரு பொல்லாத சிங்கம் வாழ்ந்தது. அது ஒரு நாள் களைப்புடன் நித்திரை செய்தது. அப்போது குட்டிச் சுண்டெலி அங்கு வந்தது. சிங்கத்தின் மேல் ஏறிக் குதித்து விளையாடியது.

சிங்கத்தின் நித்திரை குழம்பி விட்டது. கோபத்துடன் சுண்டெலியைப் பிடித்துக் கொண்டது. அது பயந்து நடுங்கியது. ``சிங்க ராசாவே, என் அன்பு ராசாவே என்னை விட்டு விடு; நான் தெரியாமல் உன்னில் ஏறி விட்டேன். எப்போதும் உனக்கு நண்பனாக இருப்பேன். தக்க சமயம் உதவியும் செய்வேன்`` என்றது.

சிங்கம் ``நீ எனக்கு நண்பனா? நீ எனக்கு உதவி செய்வாயா? தப்பிப் போ`` என நக்கலாகக் கூறி அனுப்பியது.

நாட்கள் போனது. ஒரு நாள் வேடர்கள் வைத்த வலையில், சிங்கம் சிக்கிக் கொண்டது. அங்கும் இங்கும் ஓடியது. அதனால் தப்ப முடியவில்லை. பயந்து கர்ச்சனை செய்தது. இதனைக் கேட்ட சுண்டெலி ஓடி வந்தது. தனது சின்னப் பற்களால் ஒவ்வொரு வலையாகக் கடித்தது. சிங்கத்தை வலையில் இருந்து மீட்டது.

``என் ஆசை நண்பனே! என்னைக் காப்பாற்றிய என் அன்பனே! என் ஆணவத்தால் உன்னை ஏளனம் செய்து விட்டேன்; என்னை மன்னித்து

விடு`` என்றது. சுண்டெலியும் நட்புடன் சிரித்தது. சிங்கத்தின் மேல் ஏறி விளையாடியது. நண்பர்களே! ஒருத்தரையும் வெறுக்காதீர்கள். அன்பினாலும் நட்பாலும் எதனையும் சாதிக்கலாம்.

நன்றி; வணக்கம்.

Group ஈ                    Year4 & Year5 (English school)

# அன்பு

அனைவருக்கும் வணக்கம்.

அன்பு என்பது உள்ளத்தில் ஏற்படும் அற்புதமான் உணர்ச்சி. அன்பைப் பல பெயர்கள் கொண்டு அழைப்பார்கள். கருணை, பக்தி, காதல், பாசம், நட்பு எல்லாமே அன்பின் வெளிப்பாடுதான்.

நாம் அன்பை அனுபவத்தாலும் அறியலாம்; மற்றவர்கள் செயலினாலும் அறியலாம். மனிதர்கள் மட்டுமல்ல, மிருகங்கள் பறவைகள் கூடத் தம் அன்பைக் காட்டுகின்றன.ஒரு தாய் தன் குழந்தையை அணைத்துப் பால் ஊட்டுவதும், ஒரு காக்கை தன் குஞ்சுக்குச் சொண்டினால் உணவை ஊட்டுவதும், பசு தன் கன்றை நக்கிப் பால் கொடுப்பதும் அன்பின் வெளிப்பாடேயாகும்.

எமது பெற்றோர் எம்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்றார்கள். அதனை விலை கொடுத்துக் கடையில் வாங்க முடியாது. அன்பு மிகவும் பெறுமதி மிக்கது. இது சமுகத்தின் ஒற்றுமைக்கு வழிசமைக்கும்.

அன்பை வெளிப்படுத்த மொழி தேவையில்லை; உணர்வு ஒன்றே போதும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யத் தூண்டுவதும் அன்புதான்; ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ வைப்பதும் அன்புதான். இதனால் தான் வள்ளுவர் சொன்னார்,

அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்

நண்பு எனும் நாடாச் சிறப்பு.

அன்பு உடையவர் எல்லாச் சிறப்பும் உடையவர்கள். அன்பு இல்லாதவர்கள் எல்லாச் செல்வமும் வைத்திருந்தாலும் வறுமைப்பட்டவர்கள். இதனை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.எனவே நாங்கள் எல்லோருடனும் அன்போடு பழகுவோம். வேற்றுமைகளை ஒழிப்போம். கோபம், பொறாமை, வெறுப்புப் போன்ற தீய குணங்களை விடுவோம். அன்போடு வாழ்வோம்.

நன்றி; வணக்கம்.

Group உ          Year6 & Year7 (English school)

# கல்வி

அனைவருக்கும் வணக்கம்.

``கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை`` எனச் சொல்வார் வள்ளுவப் பெருந்தகை. ஆம்! ஒருவனுக்கு அவன் கற்ற கல்வியே சிறந்த செல்வமாக இருக்கும். அதனை தவிர வேறு எதுவும் சிறப்பான செல்வமெனக் கூற முடியாது. எங்களின் அறிவு, திறன், மனப்பாங்கு அனைத்தையும் நல்ல வழியில் கொண்டு செல்வதற்குக் கல்வி பாலமாக அமையும். உலகில் மக்களுடன் பழகுவதற்கும் அவர்களுடன் அறிவுடன் பேசவும் கல்வி உதவும்.

இந்தக் கல்வியை இளமையில் கற்றிட வேண்டும். இதனால் தான் ``இளமையிற் கல் சிலையில் எழுத்து`` என்பர். ஏனெனில் எமக்கு நினைவாற்றல் உள்ளது இக்காலமாகும். அத்துடன் குடும்பம், பணம் போன்ற மேலதிக வேலைகள் அற்ற காலமும் இதுவாகும். எனவேதான் பெற்றோருடன் இருக்கும் சிறு வயதிலேயே நாம் கற்றிட வேண்டும். காலத்தில் பயிர் செய்ய வேண்டுமென்பர் பெரியோர். படிக்கும் காலத்தில் படிக்காமல் பின்னர் கவலைபடக் கூடாது.

``கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே`` என ஔவைப் பாட்டி கூறுவார். இது உண்மைதான். கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புத் தருவது கல்வியாகத் தான் இருக்க முடியும். இதன் காரணமாகத்தான் எமது பெற்றோர் எம்மைப் படிக்க வைப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். இதனை உணர்ந்து நாமும் படித்து எம் பெற்றோரை மகிழ்விக்க வேண்டும்.

கல்வியின் சிறப்பு உணர்ந்தே ஆசிரியரை ``எழுத்து அறிவித்தவன் இறைவன் ``என்பர். ஆகவே கல்வி கற்பித்த ஆசிரியகுக்கு பெற்றோருக்கு பெருமை சேர்ப்போம். படித்து உயர்ந்திடுவோம். வளம் பெறுவோம்.

நன்றி; வணக்கம்

Group ஊ Year8 & Year9 (English school)

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

அனைவருக்கும் வணக்கம்.

``ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்`` எனும் குறள் வரிகள் எவ்வளவு பொருள் பொதிந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? நாம் ஒவ்வொருவரும் நல்லவர்களாக வல்லவர்களாக வாழ்வதற்கு ஒழுக்கமே சிறந்த ஆயுதமாகும். அதனால் தான் உயிரை விடச் சிறந்ததாக ஒழுக்கம் பேணப்பட வேண்டுமென வள்ளுவர் கூறுகின்றார்.

ஒழுக்கம் என்றால் என்ன? இந்தச் சமுகத்தில் வாழ்கின்ற நாங்கள் எமக்கு என்று சில பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்போம். அந்தப் பழக்க வழக்கங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். அதுவே ஒழுக்கமாகும். அதில் இருந்து நாம் விலகி விட்டால் கெட்டவர்களெனச் சமுகத்தால் ஒதுக்கப்படுவோம்.

நாம் பலவற்றைக் கற்று உயர் பதவிகள் வகித்தாலும், ஒழுக்கமுடன் வாழவில்லை என்றால் உலகம் எம்மைப் பார்த்துச் சிரிக்கும்; படித்த முட்டாள் எனக் கேலி செய்யும். உண்மை பேசுதல்; குறை கூறாமல் வாழ்தல்; பொறாமை, பேராசை போன்ற தீய பழக்கங்களை விடுதல்; அன்பாக இருத்தல்; குறுக்கு வழியில் செயற்படுவதைத் தவிர்த்தல் யாவுமே ஒழுக்கத்திற்குரிய சிறந்த பாதையாகும்.

பிள்ளைகளாகிய நாங்கள் எமக்குரிய கடமைகளைச் செய்வது கூட நல்ல ஒழுக்கமாகும். தூய்மையாக இருப்பது; படிப்பது; பெற்றோர் சொல் கேட்பது; பெரியோரை மதிப்பது; அன்பாக இருப்பது; நட்புடன் பழகுவது யாவுமே இதனுள் அடங்கும்.

``வளரும் பயிரை முளையிலே தெரியும்`` என்பர். அத்துடன் ``ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது`` என்றும் சொல்வர். இவையெல்லாம் சின்ன வயதில் உள்ள பழக்கவழக்கங்களே வாழ்நாள் எல்லாம் எம்முடன் வருமெனக் கூறுவதாக அமைகின்றன. எனவே சிறந்த ஒழுக்கங்களை நாம் சிறு வயதில் இருந்தே பின் பற்றப் பழக வேண்டும். அதனால் வீட்டில், சமுகத்தில், நாட்டில் ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்திடலாம். `நம் வாழ்வு நம் கையில்` அதனை நன்றாக அமைத்திடுவோம்.

நன்றி; வணக்கம்

Group எ                    Year10 & Year11 (English school)

சிறுகதை வடிவம்

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

இரசிக்க இரசிக்க வாசிக்கும் சிறுகதை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தமிழிலே, ஆரம்பத்தில் செய்யுள் என்கின்ற இலக்கிய வடிவமே இருந்தது, கதையென்றாலும் மருத்துவமென்றாலும் கணிதமென்றாலும் சோதிடமென்றாலும் பாட்டிலேயே எம் முன்னோர் சொல்லி வைத்தார்கள். பனையோலைகளில் எழுதிப் பேணப்பட்டமையால் சுருக்கமாக யாவற்றையும் ஏட்டிலே பேணி வந்தார்கள்.

ஆனால், மேலைத்தேசத்தவர்களின் வருகை இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளுக்கு வந்த போது அவர்களினாலேயே short story என்ற இந்தச் சிறுகதை இலக்கிய வடிவமும் Novel என்கின்ற நாவல் இலக்கிய வடிவமும் தமிழுக்கு அறிமுகமாகின. புதுமைப்பித்தன் இதனை `மேனாட்டுச் சரக்கு` எனச் சொல்வார். `சிறிதாக உரைநடையில் விபரிக்கப்பட்ட கதை` சிறுகதையென எழுத்தாளர் சுஜாத்தா குறிப்பிடுவார்.

சிறுகதையைக் கண்ணீர் வரச் சொல்லலாம்; சிரிக்கச் சிரிக்கச் சொல்லலாம்; கோபம் வரச் சொல்லலாம்; ஆர்வம் வரச் சொல்லலாம்; வெறுப்பு வரச் சொல்லலாம். எடுத்த கருப்பொருள் உணர்ச்சியுடன் ஆரம்பம் முதல் நிறைவு வரை சொல்லப்பட்டால் அது நல்ல சிறுகதைக்கு அழகு. படித்ததும் மறந்து போவது சிறுகதையல்ல. ஒரு வாரம் கழித்தோ அல்லது ஒரு வருடம் கழித்தோ நினைவில் எப்போதும் நிற்கும் தரமான சிறுகதை.

இங்கு தேவையில்லாத வர்ணனை இருக்காது. ஒன்று அல்லது இரண்டு, மூன்று கதாபாத்திரங்களே இடம்பெறும். சிலசமயம் கதாபாத்திரமே இருக்காமல் கதை நகர்ந்து செல்லும். இதனை ஒரு சில மணிநேரத்தில் வாசித்து முடித்து விடலாம்.

தமிழிலே 1905ஆம் ஆண்டு ஷெல்லிதாஸ் எனும் புனைபெயரில் பாரதியாரே துளசிபாய் என்கின்ற சிறுகதையை முதன் முதலில் எழுதினார். இவரைத் தொடர்ந்து வ. வே. சு. ஐயர், மாதவையர் போன்றோர் சிறுகதை எழுதத் தொடங்கினர். இன்று முக்கியமான இலக்கிய வடிவமாகச் சிறுகதை தமிழிலே காணப்படுகின்றது.

நயமான வரலாறு கொண்ட இச்சிறுகதை வடிவத்தை எம்மில் எத்தனை பேர் இன்று தமிழில் வாசிக்கின்றார்கள்? வாசிக்க முயற்சி செய்வோம். நல்லதையே நாடுவோம்.    நன்றி; வணக்கம்.